
# திராவிடத்தால் வாழ்கிறோம்

1010

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# கழகம் கண்ட சட்டப் போராட்டங்கள்

**தமிழ்.கா.அமுதரசன்**

29




**கழகம் நடத்திய உயிர்ப்புமிக்க சட்டப் போராட்டங்களை உணர்வுபூர்வமாக விவரிக்கும் தொடர்!**

2020-ஆம் ஆண்டு உச்சநீதிமன்றத்தில் மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு முக்கியமான ஒரு தீர்ப்பு வழங்கியது. பெண்களுக்கு சொத்துரிமை தொடர்பான மிக முக்கியமான அந்தத் தீர்ப்புதான், 95 ஆண்டுகளுக்கு முன், தந்தை பெரியார் முன்வைத்த, ஆண்களுக்கு நிகராகப் பெண்களுக்கும் சொத்துரிமை வேண்டும் என்கிற கோரிக்கையை நிறைவு செய்தது. அண்ணல் அம்பேத்கர் நிறைவேற்ற விரும்பிய சட்டத் திருத்தம், முத்தமிழறிஞர் கலைஞர் தனது ஆட்சிக்காலத்தில் கொண்டு வந்த பெண்களுக்கு சொத்துரிமைச் சட்டத்தினை முழுமையாக்கிய தீர்ப்பாக வெளிவந்தது.

வழக்கின் முழுப் பெயர் : VINEETA SHARMA V.RAKESH SHARMA & ORS., (2020) 9 SCC 1. வழக்கின் பின்புலம் என்னவென்றால், 2005ஆம் ஆண்டு ஒன்றிய அரசு, இந்து வாரிசுரிமைச் சட்டத்தைத் திருத்தி, கூட்டுக்குடும்ப சொத்து உட்பட தந்தையின் சொத்தில் மகனுக்கு இணையாக மகளுக்கும் சமமாக (coparcenary) உரிமை வழங்கியது. ஆனால், நாடு முழுவதும் இதற்கான விளக்கம் மாறுபட்டது.

சில வழக்குகளை உதாரணமாகப் பார்த்தால் (Prakash v. Phulavati, 2015 மற்றும் Danamma v.Amar, 2018), “பெண்களுக்கு சொத்துரிமை திருத்தம் வந்த 2005-க்கு முன்னர் தந்தை இறந்திருந்தால், மகளுக்கு உரிமை கிடையாது” எனக் கூறப்பட்டது.

இதனால் சட்ட குழப்பம் ஏற்பட்டதால், உச்சநீதிமன்றத்தின் நீதிபதிகள் அருண் மிஸ்ரா, எஸ்.அப்துல் நஸீர், எம்.ஆர்.ஷா ஆகிய மூன்று பேர் கொண்ட அமர்வு வினீதா சர்மா வழக்கை விசாரித்தது.

### பிறப்பால் உருவான மரபுரிமை

இந்த வழக்கின் முக்கியக் கேள்வியாக 2005 சட்டத் திருத்தத்தின்படி, மகளுக்கு சொத்து மரபுரிமை, பிறந்த நாளிலிருந்தே வருமா, அல்லது தந்தை உயிருடன் இருக்க வேண்டுமா? என்பதாக இருந்தது. இதற்கு 2020ஆம் ஆண்டு உச்சநீதிமன்றம் அளித்தத் தீர்ப்பு, பல அதிர்வலைகளை உருவாக்கியது என்றே சொல்லலாம். குறிப்பாக, மகள் பிறந்த நாளிலிருந்தே தந்தையின் அனைத்து சொத்துகளிலும் மரபுரிமை கொண்டவர் என அந்தத் தீர்ப்பு சொன்னது. அதாவது, இந்த உரிமை பிறப்பால் உருவாகும் (BY BIRTH). திருமணம் அல்லது தந்தையின் மரணம் ஆகியவை இதைப் பாதிக்காது. தந்தை 2005க்கு முன் இறந்திருந்தாலும், மகளுக்கு மரபுரிமை உண்டு என்றது.

‘தந்தையின் மரணத்துக்கு முன்னர் பிரிக்கப்பட்டவை (PARTITION) சட்டரீதியாக முடிவடைந்த (REGISTERED/DECREED) பிரிவுகள் இருந்தால், புதிய உரிமை எழாது. ஆனால், பிரிக்கப்படாத (PENDING) பிரிவுகளில் மகளுக்கும் பங்கு சேரும்’ என்றது அந்தத் தீர்ப்பு.

அதாவது தந்தையின் இறப்பு அல்லது மகளின் திருமண நிலை முக்கியமல்ல. திருமணமாகியவளாக இருந்தாலும், மரபுரிமை நீங்காது என உறுதி செய்யப்பட்டது. இதன்மூலம், பெண்களுக்கு எந்த சொத்துரிமையும் வழங்காத நூற்றாண்டு கால இந்திய சமூகத்தில், பெண்களின் சொத்துரிமை உறுதி செய்யப்பட்டது.

இப்படியான தீர்ப்புக்கு வழி ஏற்படுத்திக் கொடுத்த சட்டத் திருத்தங்களில் முதன்மையானது 1989ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசு கொண்டுவந்த திருத்தச் சட்டம் என்றால் மிகையில்லை.

தமிழ்நாடு ஏற்கெனவே 1989இல் பெண்களுக்கு வழங்கிய சொத்துரிமையில், ‘25.03.1989-க்குப் பிறகு திருமணம் ஆனவர்களுக்கு மட்டுமே’ என வரம்பு வைத்தது. 2020ஆம் ஆண்டு உச்சநீதிமன்றம் பெண்களின் சொத்துரிமை மரபுரிமை என்றது.

> **60வது ஆண்டில் முயற்சி எடுக்கப்பட்டு, 90வது ஆண்டில் நோக்கத்தை எட்டியது. இதன்மூலம் முத்தமிழறிஞர் நம் தலைவர் கலைஞர் நிறைவேற்றிய ஒரு சட்டத்தை, 30 ஆண்டுகளுக்குப் பின் அங்கீகாரம் அளித்தது உச்சநீதிமன்றம்.**

### முக்கியக் கேள்விகள்

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்புக்கு முன்னர், பல வழக்குகள், கலைஞர் அமல்படுத்திய சொத்துரிமை சட்டத்தினை முன்வைத்து நடந்துள்ளன. பல கேள்விகள் முன்வைக்கப் பட்டுள்ளன.

தமிழ்நாடு திருத்தச் சட்டம் 1989-இன் (SECTION 29-A) படி, மகள்கள் பங்குதாரராக (COPARCENER) வர முடியுமா? திருமணம் நடந்த நாள் முக்கியமா?

1989-க்கு முன்னர் குடும்ப சொத்துப் பிரிவு நடந்திருந்தால் மகளுக்கு பின்னர் உரிமை வருமா?

திருமணம் 1989-க்கு முன்னர் நடந்தால் மகளுக்கு மரபுரிமை (COPARCENARY) இருக்குமா?

25.03.1989-க்கு முன் திருமணமான மகள்கள் மரபுரிமை coparceners கொண்டவர்கள் அல்ல என்றால், திருமணம் 1989க்கு பின் நடந்த மகள்கள், 2005 மத்திய திருத்தத்திற்கும் முன்னரே உரிமை பெற்றவர்களா? என வாதங்கள் முன்வைக்கப்பட்டன. ஆனால், எந்த நீதிமன்றங்களும் 1989-ஆம் ஆண்டு கலைஞர் கொண்டு வந்த சட்டத் திருத்தத்தினை கேள்வி எழுப்பவில்லை. அந்த சட்டம் சமத்துவ நோக்கம் கொண்டது. ஆனால், அமலாக்க நாள் முக்கியம் எனவும் தீர்ப்பு கூறின. குறிப்பாக, உச்ச நீதிமன்றங்களில், உயர்நீதி மன்றங்களில் நடைபெற்ற பல வழக்குகளின் தீர்ப்புகள் கீழ்நிலை நீதிமன்றங்களுக்கு வழிகாட்டுதலாக பயன்படுத்தப்பட்டன.

இவற்றின் மூலம், தமிழ்நாட்டில் 1989 திருத்தம் காரணமாக பெண்கள், தந்தையின் சொத்தில் மரபுரிமை பெற்றுள்ளனர். 2005ஆம் ஆண்டு ஒன்றிய அரசு கொண்டு வந்த சொத்துரிமைச் சட்டத் திருத்தம் தமிழ்நாட்டில் கூடுதல் உறுதிப்படுத்தலாக மட்டுமே இருந்தது. அதாவது, மாநிலத்தில் கொண்டு வரப்பட்ட சட்டம், தேசிய திருத்தத்துக்கு முன்னே பெண்களுக்கு உரிமை கொடுத்தது. கொடுத்தவர் கலைஞர்.

### தொடங்கிவைத்த போராட்டம்

சுருக்கமாகச் சொல்ல வேண்டும் என்றால் 25.03.1989-க்கு முன் திருமணமான மகள்களுக்கு மரபுரிமை (COPARCENARY) இல்லை. 25.03.1989 -க்கு பின் திருமணமான மகள்களுக்கு மரபுரிமை (COPARCENARY) உண்டு

2005 ஒன்றிய அரசின் அனைத்து மாநிலங்களுக்குமான சட்டத் திருத்தம் மூலம் பெண்களுக்கு மரபுரிமை இந்தியா முழுவதும் உறுதி செய்யப்பட்டது. 2020ஆம் ஆண்டுக்கு பிறகு ‘பிறந்த நாளிலிருந்தே’ மகள்கள் மரபுரிமை கொண்டவர்கள் என்றுகூறி சட்டத்தின் நோக்கத்தை விரிவுபடுத்தியது.

இதன்மூலம் 1929ஆம் ஆண்டு செங்கல்பட்டு முதலாவது சுயமரியாதை மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானம், அதன் 60வது ஆண்டில் முயற்சி எடுக்கப்பட்டு, 90வது ஆண்டில் நோக்கத்தை எட்டியது. இதன்மூலம் முத்தமிழறிஞர் நம் தலைவர் கலைஞர் நிறைவேற்றிய ஒரு சட்டத்தை, 30 ஆண்டுகளுக்குப் பின் அங்கீகாரம் அளித்தது உச்சநீதிமன்றம். அவர் இந்தியாவுக்கே முன்னோடி என்பதை அந்தத் தீர்ப்பும் உறுதி செய்தது.

...தொடரும்

## வழக்கமான பட்டியல் திருத்தம் அல்ல எஸ்.ஐ.ஆர்!

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் (எஸ்.ஐ.ஆர்.) ஜனநாயகத்திற்கு எதிரானது என தி.மு.க. தரப்பில் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. இது தொடர்பாகத் தனது சமூக வலைதளப் பக்கத்தில் பதிவிட்டுள்ள எழுத்தாளர் சூர்யா சேவியர், “எஸ்.ஐ.ஆர். என்பது, ஏற்கெனவே உள்ள வாக்காளர் பட்டியலைச் சரிபார்த்து நீக்கல் சேர்த்தல் செய்யும் செயல்முறை அல்ல. தமிழ்நாட்டில் உள்ள 6 கோடியே 36 லட்சம் வாக்காளர்களும் இனிமேல் வாக்காளர்கள் கிடையாது. வாக்காளர் பட்டியலே இப்போது கிடையாது. புதிய கணக்கெடுப்புப் படிவத்தைக் கொடுத்து, அது ஏற்றுக்கொள்ளப் பட்டால் மட்டுமே ஒருவர் வாக்காளராக இருக்க முடியும். ஒரு வாக்குச்சாவடி இருக்கும் பகுதியில், அனைத்து வாக்காளர்களும் அப்படிவத்தை நிரப்பி சமர்ப்பிக்கவில்லை என்றால், அந்த வாக்குச்சாவடியில் வாக்காளர்களே கிடையாது.

புதிதாகக் கொடுக்கப்படும் கணக்கெடுப்புப் படிவத்திலும், தேவைக்கு அதிகமான விவரங்கள் கேட்கப்படுகின்றன. படிவத்தில் பிறந்த தேதி, ஆதார் எண், கைப்பேசி எண், தந்தை/பாதுகாவலரின் பெயர், தாய் மற்றும் கணவர்/மனைவியின் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை எண் போன்ற விவரங்கள் கோரப்படுகின்றன. மேலும், 23 ஆண்டுகளுக்கு முன்பு (2002-ல்) நடந்த முந்தைய சிறப்புத் தீவிரத் திருத்தத்தில் இருந்த வாக்காளரின் உறவினர் பெயர் மற்றும் உறவு முறை பற்றிய தகவலும் கூடுதலாகக் கேட்கப்படுகிறது.

குறிப்பிட்ட உறவினர் இறந்திருந்தால், இறப்புச் சான்றிதழ் சமர்ப்பிக்க வேண்டிய சூழல் வரும்.

இப்படிவம் ஒருவருக்கு ஒன்று மட்டுமே வழங்கப்படும். இதில் QR CODE இருப்பதால், இதனை ‘ஜெராக்ஸ்’ எடுத்து வேறு ஒருவர் பயன்படுத்த முடியாது. படிவத்தைத் தவறாக நிரப்பினாலோ, தவறான தகவலை மாற்றிக் கொடுத்துவிட்டாலோ, திருத்தித் தருவதற்கான வாய்ப்பு இருக்குமா என்பது தெரியவில்லை.

2002-இல் வாக்களிக்காமல் பின்னர் வாக்காளரானவர்கள், தங்களின் வாக்குரிமையை நிரூபிக்க ஆவணங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். ஒரு மாதம்தான் அவகாசம். குறைந்தது 1.5 கோடி வாக்காளர்களாவது தமிழ்நாட்டில் வாக்குரிமையை இழக்க நேரிடும் அல்லது மேல்முறையீடு செய்து வாக்குரிமையைப் பெறும் சூழல் வரும். குடியுரிமை திருத்தச்சட்டத்தை மறைமுகமாக நடைமுறைப்படுத்துகிறார்களா என்ற சந்தேகம்தான் எழுகிறது” என்று பதிவிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



சுப்பையா முத்துகுமாரசாமி



### சிறப்பு மரப்பேழையில் சங்க இலக்கியம்!

2014-ஆம் ஆண்டு, ஏப்ரல் மாதம், தமிழினத் தலைவர் முத்தமிழறிஞர், கலைஞர் அவர்களிடம், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளியிட்ட சங்க இலக்கியம் தொகுப்பினை எனது தந்தையார், நிறுவனத் தலைவர் முனைவர் இரா முத்துக்குமாரசாமி அவர்களுடன் நானும் சென்று அளித்து மகிழ்ந்தோம். கலைஞருக்காக ஒரு மரப்பேழை செய்து, அதில் நூல்களை வைத்து அளித்ததை வெகுவாக ரசித்தார்.

**– சுப்பையா முத்துகுமாரசாமி,**
**தலைவர் – சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம்,**
**ஆழ்வார்பேட்டை, சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## கருவூலம்

### கலைஞரைக் காப்பாற்றிய தொண்டர்!

1967-ஆம் ஆண்டு பிப்ரவரி 15-ஆம் தேதி, சென்னையில் முதற்கட்ட தேர்தல் வாக்குப்பதிவு. முதல் நாள் இரவு சென்னை முழுவதும் கழகப் பணிமனைகளுக்குச் சென்று பார்வையிட்டு, கலைஞர் தனது தொகுதியான சைதாப்பேட்டைக்கு வந்துகொண்டிருந்தார். கோட்டூர்புரம் அருகே அவரது காரை மறித்த சிலர், கொலைவெறித் தாக்குதல் நடத்தினர். சாரங்கன் என்கிற தொண்டர் அந்தத் தாக்குதலில் இருந்து கலைஞரின் உயிரைக் காப்பாற்றினார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131